SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007


# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 10 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரபிஉல் ஆகிர் 23

மாநிலம் பயனுற!


மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, அக்டோபர் 27, 2024 ● வெளியூர்: 28-10-2024, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 111 ● 6 பக்கம் ● ரூ.6

## குஜராத்தில் நாளை ராணுவ விமான உற்பத்தி ஆலையை திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி



**புதுடெல்லி, அக். 27-**

பிரதமர் நரேந்திர மோடி நாளை (28ந்தேதி) குஜராத் செல்கிறார். காலை 10 மணிக்கு வதோதராவில் உள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் (டி.ஏ.எஸ்.எல்) வளாகத்தை மோடிஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஆகியோர் திறந்து வைக்கிறார்கள்.

இந்த வளாகத்தில் ராணுவத்துக்கு தேவையான சி295 ரக விமானம் தயாரிக்கப்பட உள்ளது. இது இந்தியாவின் ராணுவ தளவாட உற்பத்தியில் மிகச்சிறந்த மைல்கல் ஆகும். இந்த ஆலைக்கு பிரதமர் மோடி கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் அடிக்கல் நாட்டி இருந்தார்.

ராணுவத்துக்காக மொத்தம் 56 சி295 ரக விமானங்களை வாங்க ஏர்பஸ் நிறுவனத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் 16 விமானங்கள் ஸ்பெயினில் தயாரிக்கப்பட்டு இந்தியாவுக்கு வழங்கப்படும். மீதமுள்ள 40 விமானங்கள் டி.ஏ.எஸ்.எல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும். ராணுவ விமானத்தை தயாரிக்க இருக்கும் முதல் தனியார் வளாகமாக இது இருக்கும். இந்த விமான தயாரிப்பு திட்டத்துக்கு டாடா நிறுவனம் மட்டுமல்லாது பாரத் எலக்ட்ரானிக்ஸ், பாரத் டைனமிக்ஸ் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களும் சில குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளிக்கும்.

11 மணிக்கு அங்குள்ள லட்சுமி விலாஸ் அரண்மனையை பிரதமர் மோடி பார்வையிடுகிறார். மதியம் 2.45 மணிக்கு அம்ரேலிக்கு செல்லும் அவர் பாரத் மாதா சரோவர் அணையை திறந்து வைக்கிறார். இதுதவிர அங்கு நடைபெறும் பொது நிகழ்ச்சியில், மொத்தம் ரூ.4,800 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

## இந்திய அரசியல் வரலாற்றில் சாதனை படைத்த ஒரே மாநாடு: பிரேமலதா



**சென்னை, அக். 27-**

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கி முதல் மாநாட்டை அறிவித்தார். தமிழக மக்கள், அரசியல் கட்சியினர் அனைவரிடமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த மாநாடு இன்று விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் நடைபெறுகிறது.

வெற்றிக் கொள்கை திருவிழா என்று பெயர் குறிப்பிட்டு இந்த மாநாட்டு பணிகளை விஜய் கட்சியினர் முன்னெடுத்து கடந்த 20 நாட்களுக்கும் மேலாக தீவிரமாக பணி செய்து வந்தார்கள்.

85 ஏக்கர் பரப்பளவில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு செல்வதற்கு 5 நுழைவு வாயில்களும், வெளியே செல்வதற்கு 15 வழிப்பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. விஜய் கட்சி மாநாட்டுக்கான பிரமாண்ட ஏற்பாடுகள் காரணமாக வி.சாலை பகுதி மட்டுமின்றி விழுப்புரம் மாவட்டமே விழாக்கோலம் பூண்டுள்ளது. எதிர்பார்ப்புடன் தொண்டர்கள் மாநாட்டிற்காக அதிகாலை முதலே குவிய தொடங்கி விட்டார்கள்.

இந்த நிலையில், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு கூறியிருப்பதாவது:

இந்திய அரசியல் வரலாற்றில் சாதனை படைத்த ஒரே மாநாடு!

மதுரை தேமுதிக முதல் மாநாடு 150 ஏக்கர் நிலப்பரப்பில் 2.5லட்சர் சேர் போடப்பட்டு நடத்தப்பட்டது!

உட்கார இடம் இல்லாமல் மாநாட்டு பந்தலுக்கு வெளியே லட்சோப லட்ச தொண்டர்கள் குவிந்தனர்!

மொத்தம் 25லட்சம் பேர் கலந்து கொண்டனர்!

உலக சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது! என்று கூறியுள்ளார்.

## எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 12 தமிழக மீனவர்களை சிறைப்பிடித்த இலங்கை கடற்படை

**ராமநாதபுரம், அக். 27-**

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர் சிறை பிடிப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர் கதையாகியுள்ளது. இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை இன்று சிறைப்பிடித்துள்ளது. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 12 மீனவர்களை சிறைப்பிடித்ததோடு, ஒரு விசைப்படகையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். மீனவர்களை இலங்கையில் உள்ள முகாமிற்கு அழைத்துச் சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## விஜய் கட்சி மாநாடு

# விக்கிரவாண்டியில் குவியும் தவெக தொண்டர்கள்

## மாலை 6 மணிக்கு துவங்குகிறது

**விழுப்புரம், அக். 27-**

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கி முதல் மாநாட்டை அறிவித்தார். தமிழக மக்கள், அரசியல் கட்சியினர் அனைவரிடமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த மாநாடு இன்று விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

கட்சியின் முதல் மாநாடு என்பதால், விஜய் என்ன பேச உள்ளார், கட்சியின் எதிர்கால கொள்கைகள் என்ன, திட்டங்கள், எதிர்கால அரசியல் பயணம், அவர் எந்த மாதிரியான அரசியலை முன்னெடுக்கப் போகிறார் என்பதை அறியவும் அவரது நெஞ்சில் குடியிருக்கும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் உள்ளனர். அதுமட்டுமின்றி இம்மாநாட்டை ஒட்டுமொத்த தமிழக மக்களும், பல்வேறு அரசியல் கட்சியினரும் உற்றுநோக்கியுள்ளதால் மாநாடு தனிச்சிறப்பையும், மிகுந்த எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. மாநாட்டில் பங்கேற்பதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து விக்கிரவாண்டியில் தவெக தொண்டர்கள் குவிந்து வருகின்றனர்.

கடும் வெயிலால் தவெக மாநாட்டு திடலில் 20க்கும் மேற்பட்டோர் ஆங்காங்கே மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மயக்கமடைந்த நபர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**நாகையில் போக்குவரத்து ஸ்தம்பிப்பு:**

தவெக மாநாட்டில் பங்கேற்க நாகையில் இருந்து 150 வாகனங்களில் தொண்டர்கள் புறப்பட்டுள்ளனர். இதனால் நாகை புதிய பேருந்து நிலையம் முதல் நாகூர் வரை போக்குவரத்து ஸ்தம்பித்தது. நாகைநாகூர் சாலையில் தொண்டர்கள் ஆரவாரத்துடன் அணிவகுத்துச் சென்ற வாகனங்களால் பரபரப்பு ஏற்பட்டது.

**தவெக மாநாடு குடிநீரின்றி தொண்டர்கள் அவதி**

தவெக மாநாட்டுக்கு அதிகாலை முதலே தொண்டர்கள் குவிந்து வரும் சூழலில் குடிநீர் கிடைக்காமல் தொண்டர்கள் அவதி அடைந்துள்ளனர். குடிநீரின்றி மயக்கமடைந்த நபர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாநாட்டு உள்பகுதியில் திரள்வதால் கட்டுப்படுத்த முடியாமல் பவுன்சர்கள் திணறி வருகின்றனர். மாநாட்டு திடலில் இரு புறங்களிலும் தண்ணீர் வைக்கப்பட்டுள்ளது.



தொண்டர்கள் அமைதி காக்கும்படி தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அறிவுறுத்தி உள்ளார்.

**டாஸ்மாக் கடைகளை திறக்க வேண்டாம் - டாஸ்மாக்**

தவெக மாநாட்டுக்கு வரும் தொண்டர்களின் பாதுகாப்பு கருதி விழுப்புரம், விக்கிரவாண்டி, முண்டியம்பாக்கம் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளை திறக்க வேண்டாம் என்று டாஸ்மாக் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

**பவுன்சர்கள், தொண்டர்கள் இடையே வாக்குவாதம்**

தவெக மாநாட்டில். அனுமதிக்கப்பட்ட இடத்தை தவிர வேறு பகுதிகளில் அமர்ந்துள்ள தொண்டர்களை பவுன்சர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றி வருகின்றனர். இதனால் பவுன்சர்கள் தொண்டர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

தவெக மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து விழுப்புரம் நோக்கி சென்ற ரெயிலில் சென்றவர்கள் மாநாட்டு பந்தலை பார்த்து பலர் ஆர்வமிகுதியில் கீழே குதித்து உள்ளனர். ரெயிலில் இருந்து குதித்தபோது தவறி விழுந்த நிதிஷ் குமார் (21) என்ற இளைஞர் தீவிர காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தவெக மாநாட்டிற்காக சென்ற இளைஞர் சென்னை தேனாம்பேட்டையில் விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, தவெக மாநாட்டிற்கு சென்றவர்களின் வாகனம் தாம்பரம் அருகே கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 11 பேர் காயம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தவெக திடலில் முண்டியடித்து நுழைந்த தொண்டர்களால், கடைசி 4 வரிசையில் இருந்த சேர்கள் உடைக்கப்பட்டுள்ளது. விஐபி சேர்கள், மகளிருக்கான இருக்கைகளையும் ஆண் தொண்டர்கள் ஆக்கிரமித்துள்ளதால் அங்கு சலசலப்பு ஏற்பட்டுள்ளது. மாநாட்டு திடலில் வைக்கப்பட்டுள்ள கியூ ஆர் ஸ்கேன் முறையை தொண்டர்கள் கண்டுகொள்ளவில்லை என கூறப்படுகிறது.

**50 சதவீதம் நிரம்பிய பார்க்கிங்**

தவெக மாநாட்டிற்காக 250 ஏக்கர் பரப்பளவில் 5 இடங்களில் பார்க்கிங் வசதிகள் செய்த நிலையில் காலை 11 மணிக்குள் பார்க்கிங் பகுதி முழுவதுமாக நிரம்பிவிடும் என தகவல் வெளியாகி உள்ளது. தற்போதே சுமார் 1 லட்சம் தொண்டர்கள் மாநாட்டு திடலில் குவிந்துள்ளனர்.

## புதிய பேருந்து சேவையை துவக்கி வைத்த அமைச்சர்




தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வேப்பூர் பேருந்து நிலையத்தில் ஒரு புதிய வழித்தடத்தில் மகளிர்களுக்கான விடியல் பேருந்து சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அருகில் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன்.

# மக்கள் சந்திப்பு திட்ட முகாம்



**சேலம், அக். 27–**

சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் சூரமங்கலம் மண்டலம், சத்திரம் திருமண மண்டபத்தில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில் சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு பேசியதாவது:

சேலம் மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்கள், 6 நகராட்சிகள் மற்றும் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை தீர்க்கும் வகையில் மனுக்களைப்பெறும் முகாமானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பாகவே அனைத்து தொகுதிகளிலும் மனுக்களைப் பெற்று அந்த மனுக்களின் மீது ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் ஏறத்தாழ 95% மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து நிறைவேற்றி தந்திருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மக்களுடன் முதல்வர் என்கிற திட்டத்தினை அறிவித்து அரசின் பல்வேறு துறைகளை அதில் பங்கேற்க செய்து ஊராட்சிகள், மாநகராட்சிப்பகுதிகள், பேரூராட்சிப் பகுதிகள் மற்றும் நகராட்சிகள் என தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மக்களுடைய கோரிக்கைகளை பெற்று அதனை கனிவோடு பரிசீலித்து நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் சங்ககிரி, எடப்பாடி, கொங்கணாபுரம், இடங் கணசாலை ஆகிய இடங்களிலும், அதே போன்று கொளத்தூர், மேட்டூர், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி மற்றும் ஏற்காடு ஆகிய ஒன்றியங்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் எல்லாம் வியந்து பார்க்கிற அளவிற்கு பல்வேறு திட்டங்களை இந்த கடந்த 3 லு ஆண்டு காலத்திலே நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். சுமார் 20 லட்சம் பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 17 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்கி இருக்கின்றார்கள்.

சேலம் மாவட்டத்தில் மட்டும் 5.5 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் திட்டத்தின் கீழ் 19 கோடி முறை மகளிர் பயணம் செய்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தில் 3 ஆண்டுகள் படித்தால் மாணவிகளுக்கு 36,000 மும், 5 ஆண்டுகள் பட்டப்படிப்பாக இருந்தால் 60 ஆயிரம் ரூபாய் என்று இந்த மகத்தான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்திருக்கிறார்கள்.

மாணவிகளுக்கு மட்டுமல்லாமல் மாணவர்களுக்கும் தமிழ் புதல்வன் திட்டத்தினை அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றி தந்திருக் கிறார்கள். மாணவ, மாணவிகள் பயன்பெறுவதற்காக தொடங்கப்பட்ட நான் முதல்வன் திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 83 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பான எதிர்காலத்தை அமைத்து தர வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் நான் முதல்வன் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

கல்வியும் மருத்துவமும் எனது இரண்டு கண்கள் என தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பிட்டு மருத்துவம் மற்றும் கல்வித்துறைக்கு அதிக நிதியினை ஒதுக்கி தந்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் இளைய தலைமுறை நல்ல நிலைக்கு வரவேண்டும், அவருடைய எதிர்காலம் சிறப்பாக அமைந்திட வேண்டும் என்பதற்காகவே பள்ளிக்கல்வித்துறைக்கு மட்டும் 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதியினை ஒதுக்கி தந்து இருக்கிறார்கள்.

மேலும், சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் மூலம் விவசாயிகளுக்கு ரூ.2,965 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மகளிர் சுய உதவி குழுவை சேர்ந்த சகோதரிகளுக்கு ரூ.4000 கோடி ரூபாய் கடனுதவியாக வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.450 கோடி ரூபாய் கூட்டுறவு வங்கியில் 5 பவுன் நகை வைத்து பெற்ற கடனை தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

சேலம் மாநகராட்சி பகுதியில் பழைய பேருந்து நிலையம் புனரமைக்கப் பட்டுள்ளது. அதேபோன்று பள்ளப்பட்டி ஏரி புனரமைக்கப்பட்டிருக்கிறது. தம்மண்ணன் ரோடு, லீ பஜார் ரோடு, சீதாராமன் ரோடு சீரமைக்கப்பட்டு இருக்கிறது. சூரமங்கலத்திற்குட்பட்ட சத்திரம் மண்டபம் புனரமைக்கப்பட்டு இருக்கிறது. சேலம் மாநகராட்சியில் இருக்கின்ற போடிநாயக்கன்பட்டி ஏரி, மூக்கனேரி ஏரிகள் புனரமைக்கப் பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு மட்டும் ரூ.548 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

இன்றையதினம் நடைபெறும் முகாமில் வருவாய்த்துறை, மின்சாரத்துறை, கூட்டுறவுத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தொழிலாளர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் வருகைதந்து பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

குறிப்பாக, குடிநீர் இணைப்புகள், தெருவிளக்கு வசதி, சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று, வாரிசுச்சான்று, தனிப்பட்டா, கூட்டுப்பட்டா, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, பட்டாவில் பெயர் மாற்றம், குடும்ப அட்டை, கல்விக்கடன், மின் இணைப்பு பெயர் மாற்றம், சொத்து வரி பெயர் மாற்றம் போன்ற பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகாணப்படவுள்ளன. மனுக்களைக் கொண்டுவந்துள்ள பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் தங்களது கைபேசி எண்ணை எழுதித்தர வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சருடைய வழிகாட்டுதலோடு பெறப்பட்ட பொதுமக்களுடைய கோரிக்கை மனுக்களையெல்லாம் அரசு அலுவலர்கள் 100% அளவிற்கு பரிசீலித்து நிறைவேற்றித் தருவதற்கு ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் பணியாற்றிட வேண்டும். இவ்வாறு பேசினார்கள்.

இம்முகாமில், சேலம் மாநகராட்சி, வருவாய்த்துறை உள்ளிட்ட துறைகளின் அரசு நலத்திட்ட உதவிகளையும் சுற்றுலாத்துறை அவர்கள் வழங்கினார்கள்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத்சிங், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, சூரமங்கலம் மண்டல உதவி ஆணையர் சுரேஷ் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## காணவில்லை

எனது பத்தாம் வகுப்புமதிப்பெண் சான்றிதழ் வ.எண்: 11090957, பதிவெண்: XM20R0104073116, தேர்வெண்: 4073116 என்ற மதிப்பெண் சான்றிதழ் கயத்தாறு பேரூராட்சி அலுவலகம் முன்பு இருந்த போது தவறிவிட்டது.

அனுகவேண்டிய முகவரி:-
**மு.நாகலட்சுமி**, த/பெ.முருகன்,
க.எண்.39, கோட்டைபிள்ளையார்கோவில் தெரு,
கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்.

# நெல்லித்தோப்பு தொகுதியில் சாலை அமைக்கும் பணி



**புதுச்சேரி, அக். 27–**

புதுச்சேரி நெல்லித்தோப்பு தொகுதியில் லெனின் வீதி பிரதான சாலை மறு சீரமைக்கப்பட்டு இரு புறமும் பா வடிவில் கால்வாய் அமைத்து தார் சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் இருக்கிறது

புதுச்சேரி மாநில என்டிஏ கூட்டணி அரசின் மாநில உள்கட்டமைப்பு பணிகள் வேகமாக நடந்து கொண்டு வருகிறது. நெல்லித்தோப்பு தொகுதியில் லெனின் வீதி பிரதான சாலை மறு சீரமைப்பு பணி பொதுப்பணித்துறையால் தார் சாலை அமைக்கும் பணி நடந்து கொண்டி ருக்கின்றது. பொதுமக்களின் மற்றும் வியாபாரி களின் நலன் கருதி தீபாவளி பண்டிகைக்கு முன் முடிக்க வேலை திட்டமிட்டு பணிகள் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. சாலை பணிகள் இறுதி கட்டத்திற்கு வந்திருக்கும் நிலையில் பாரதிய ஜனதா கட்சி தொகுதி நிர்வாகிகள், நகர மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள் பார்வையிட்டார்கள்.

சாலை போடும் வேலையை துரிதப்படுத்த செயற் பொறியாளர்களுடன் விவாதித்தார்கள். இந்நிகழ்ச்சியின்போது தொகுதி பாரதிய ஜனதா கட்சிமூத்த தலைவர் இளங்கோவன், நெல்லித்தோப்பு தொகுதி தலைவர் உமாபதி, சண்முகம், கண்ணதாசன், சௌரிராஜன், ரமேஷ், திலகவதி, ரகுநாதன், அருள் பிரகாஷ் உடன் பார்வையிட்டார்கள்.

# குறைகளை கேட்டறிந்த சட்டமன்ற பேரவை பொதுக்கணக்கு குழு தலைவர்



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் குறித்து, பணியாளர்களிடம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழு தலைவர் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா முன்னிலையில் கேட்டறிந்தார். உடன் பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, அப்துல் சமது, ஐயப்பன், சந்திரன், சேகர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல்.

# கும்பகோணம் இதயா மகளிர் கல்லூரி வெள்ளி விழா நிகழ்ச்சி



**கும்பகோணம், அக். 27–**

கும்பகோணம் இதயா மகளிர் கல்லூரி மற்றும் ஜூனியர் சேம்பர் இன்டர்நேஷனல் இணைந்து, கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, ஜூனியர் ஜேசிஸ் விங் இதயா கல்லூரி அமைப்பை தொடங்கி வைத்தனர். கல்லூரியின் முதல்வர் முனைவர் யூஜின் அமலா தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஜேஎப்எம் மருத்துவர் அன்பு தனபாலன் கலந்துகொண்டார். சனோபர் நிஷா, சுவிதா, யாழினி ஆகியோர் தலைவர், செயலர் மற்றும் பொருளாளராக 47 உறுப் பினர் களுடன் பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் யிசிமி கும்பகோணம் மகாமகம் சிட்டி தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் இதர பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

# தீபாவளியை ஆரோக்கியம் நிறைந்த பாதாம் உடன் கொண்டாடுங்கள்

## ஊட்டச்சத்து-ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி அறிவுரை

**கோவை, அக். 27–**



இருளை நீக்கி அனைவரின் வாழ்விலும் ஒளி வீசும் தீபாவளி பண்டிகையானது நம் அன்புக் குரியவர்களுடன் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியுடன் கொண் டாடும் பண்டிகையா கும். இந்த பண்டிகையில் நாம் அனைவரும் கார்போஹைட் ரேட் நிறைந்த இனிப்பு மற்றும் கார வகைகளை அதிகமாக சாப்பிடுகிறோம். இதுபோன்ற பண்டிகை காலங்களில் மகிழ்ச்சியான கொண்டாட்டங் களுடன் நாம் சாப்பிடும் உணவு களிலும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில் நாம் சாப்பிடும் உணவுகள் மூலம் நமது உடல் எடை அதிகரிக்காமலும் சர்க்கரை அளவு அதிரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இது போன்ற காலங்களில் பாதாம் போன்ற சத்தான பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்வது என் பது உங்கள் உடலுக்கு ஆரோக்கியம் தருவதோடுப ண்டிகையையும் மகிழ்ச்சியாக கொண்டாடலாம். ஆற்றல் மிகுந்த பாதாமில் நம்ப முடியாத பல்வேறு சிறப்புகள் உள்ளன. இதை அப்படியே பச்சை யாகவோ, வறுத்தோ அல்லது பல் வேறு உணவுகளில் சேர்த்தோ சாப் பிடலாம். இவை உடலுக்கு பல்வேறு ஆரோக்கிய நன்மைகளை வழங்கு கிறது. இதில் உள்ள அதிக அளவிலான நார்ச்சத்து மற்றும் புரதம்ஆகியவை ஒருவரை நீண்ட நேரம் சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவுகிறது, மேலும் அதிக அளவில் சாப்பிடுவதையும் கட்டுப்படுத்து கிறது, இது ஒரு சீரான மற்றும் ஆரோக்கியமான உணவாக உள்ளது. மேலும் பாதாமில் புரதம் அடர்த்தியாக இருப்பதால், அவை தசை வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. சிறிது கூடுதலாக பாதாம் எடுத்துக் கொள்ளும்போது அது, நாம் அதிக அளவில் கார்போ ஹைட் ரேட் உணவுகள் சாப்பிடுவதை குறைப்பதோடு ரத்த சர்க்கரை அள வைக் கட்டுப்படுத்த உதவுவதோடு, உணவுக்கு முந்தைய இன்சுலின் அளவை கட்டுக்குள் வைத்திருக்கிறது. இதய பாதிப்பால் ஏற்படும் வீக்கத்தையும் குறைக்கிறது. இதுகுறித்து ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், தீபாவளி என்பது மகிழ்ச்சி மற்றும் கொண்டாட் டத்தை வெளிப்படுத்தும் பண்டிகையாகும். நாம் நமது

உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளை தேர்வு செய்து சாப்பிடுவதே சிறந்ததாகும். ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கக்கூடிய இனிப்புகளுக்கு பதிலாக, ஆரோக்கி யமான மாற்று உணவுகளை தேர்வு செய்வது மிகச் சிறந்த வழியாகும். ஒரு கைப்பிடி பாதாம், கார்போஹைட்ரேட் உணவுகளின் ரத்த சர்க்கரை தாக்கத்தை குறைக்க உதவுகிறது. இது உணவு உண்பதற்கு முந்தைய இன்சுலின் அளவை கட்டுக்குள் வைக்க உதவுகிறது. சிறிய மாற்றங்களை செய்வதன் மூலம், நீங்கள் உடல் ஆரோக்கியத்துடன் தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடலாம் என்று தெரிவித்தார்.

# ராசா எம்பி பிறந்த நாள் விழா



**கோவை, அக். 27–**

கோவை மாவட்டம் மேட்டுப் பாளையத்தில் உள்ள நீலகிரி பாராளு மன்ற உறுப்பினர் அலுவலக வளாகத் தில் ஆ.ராசா எம்பி பிறந்தநாள் விழா தலைமை செயற்குழு உறுப்பினர் டீ.ஆர்.சண்முக சுந்தரம் தலைமையில் திமுகவினர் 25 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி அனைவருக் கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடி னர். மேலும் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு டிஆர் சண்முகசுந்தரம் 500க்கும் மேற்பட்ட கழகத் தொண்டர் களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அதன் பின்னர் நீலகிரி பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் ராசாவிற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் கட்சி நிர்வாகிகள் கோஷம் எழுப்பி வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப் பினர் ராசாவின் நேர்முக உதவியாளர் ரோச் தனசாமி, மேட்டுப்பாளையம் நகர கழக செயலாளர்கள் பா. முனுசாமி, முகமது யூனிஸ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பிரஸ்குமார், வடக்கு மாவட்ட நெசவாளர் அணி தலைவர் கணேஷ்மூர்த்தி, சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் கே.மனோகரன், மீனவர் அணி அமைப்பாளர் ராம் குட்டி, மீனவர் அணி துணை அமைப்பாளர் பாபு ஆகியோருடன் திமுகவின் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் ஆ.ராசாவின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்



நாமக்கல், அக். 27-

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சரசு திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா, நாமக்கல் பாராளு மன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன் முன்னிலையில் மாற்றுத்திறனாளி களுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமில் 34 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.15 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தெரிவித்தாதவது, தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி மாற்றுத் திறனாளிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்திர உதவித்தொகையை ரூ.1,500ஆக உயர்ந்தி வழங்கி அரசாணை வெளியிட்டுள்ளார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், காதொலி கருவிகள், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஆணைகள் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும், மாற்றுத்திற னாளிகளுக்கான முகாம்களை நடத்தி அவர்களுக்கு தேவையான நலத் திட்டங் களை வழங்கிட உத்தர விட்டுள்ளார்கள். மாற்றுத்திறனாளிகள் அரசின் திட்டங்கள், மருத்துவகாப்பீடு அட்டை, உதவித்தொகைபெற அடையாள அட்டை மிகவும் அவசியம். எனவே, அடையாள அட்டை இல்லாதவர்கள் முகாம்களில் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுகொள்ள வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கும் விதமாக அனைத்து வட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகில் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய தினம் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்களில் 17 மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய அடையாள அட்டைகள், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலாரூ.2,780 மதிப்பில் காதொலிக்கருவிகள், ரூ.9,350 மதிப்பில் சிறப்பு சக்கரநாற்காலி, ரூ.9,050 மதிப்பில் மூன்று சக்கர நாற்காலி, ரூ.6,840 மதிப்பில் தையல் இயந்திரம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.85,000 மதிப்பில் தனிநபர் கடன் உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் உமா வழங்கினார்.

இன்றைய தினம் நடைபெறும் ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளின் உடல் தன்மை குறித்து பரிசோதனை செய்வதற்கு குழந்தைகள் நல மருத்துவர், காது, மூக்கு தொண்டை நிபுணர் எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர், மனநல சிகிச்சை மருத்துவர், கண் சிகிச்சை மருத்துவர் மற்றும் செவித்திறன் பரிசோதகர் ஆகியோர் அடங்கிய மருத்துவ குழுவினர் வருகை தந்துள்ளார்கள். இம்முகாம்களை மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பயன்படுத்தி கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

மேலும், ஒருங்கிணைந்த சிறப்பு மருத்துவ முகாமில் 25 மாற்றுத்திறனாளிகள் புதிய தேசிய அடையாள அட்டைக்கும், 15 மாற்றுத் திறனாளிகள் அடையாள அட்டையை புதுப்பிக்கவும் விண்ணப்பித் துள்ளார்கள். இம்முகாமில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலர் ஜானகி, இளநிலை மறுவாழ்வு அலுவலர் பிரகாஷ், மாற்றுத்திறனாளிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# சாலை அமைக்க நிதி ஒதுக்கிய வைத்திலிங்கம் எம்பி



புதுச்சேரி, அக். 27-

புதுச்சேரி உழவர்கரை தொகுதிக்குட்பட்ட முத்துப்பிள்ளை பாளையம் பாலாஜி நகர் மற்றும் ஞானசம்பந்தம் நகர் பகுதிகளின் உட்புற சாலைகளை அமைப்பதற்கு முன்னாள் துணை சபாநாயகரும் உழவர்கரை தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம். என்.ஆர்.பாலன் பரிந்துரையின் பேரில் ரூ.10,48,000 தனது மக்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதுச்சேரி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் ஒதுக்கீடு செய்து அதற்கான கடிதத்தினை வழங்கினார்கள். அப்பொழுது அந்தப் பகுதி மக்கள் திரளாக வந்திருந்து வைத்திலிங்கத்துக்கும், பாலனுக்கும் நன்றியினை தெரிவித்து தங்களது மகிழ்ச்சியினை பகிர்ந்து கொண்டார்கள்.ஆக மொத்தமாக சுமார் 55 லட்ச ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# புதிய பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டும் ஊரக வளர்ச்சி ஊராட்சி ஒன்றிய கூட்டத்தில் தீர்மானம்

விழுப்புரம், அக். 27-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு புதிய பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு ஊரக வளர்ச்சி ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்க மாவட்ட பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநில தலைமை நிலைய செயலாளர் வி.பாலாஜி தலைமை தாங்கினார். மாநில இணைச் செயலாளர் எம். டேவிட் குணசீலன் முன்னிலை வகித்தார். விழுப்புரம் மாவட்ட செயலாளர் கோவிந்தசாமி அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு ஊரக வளர்ச்சி ஊராட்சி ஒன்றிய பணியாளர் சங்கத்தின் முன்னாள் மாநில பொதுச் செயலாளர் எஸ். ராம்குமார், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட தலைவர் கவிஞர் ம.ரா. சிங்காரம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒருங்கிணைப் பாளர் களையும், கணினி உதவியாளர்களையும், பணி நிரந்தரம் செய்து அடிப்படை சம்பளம் வழங்க வேண்டும், சுகாதார ஊக்குனர்களுக்கு ஊக்கத்தொகை ரூபாய் இரண்டாயிரம் வழங்க வேண்டும், தூய்மை காவலர்களுக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 5 ஆயிரத்தை உயர்த்தி ரூ.10000 ஆக வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட துணைத்தலைவர் மணிகண்டன், மாவட்ட பொருளாளர் குமரவேல், தொழிலாளர் நலசங்க மாநில துணைத்தலைவர் பொன்னன், நாராயணன் புதிய மாவட்ட தலைவராக கோவிந்தசாமி, செயலாளராக பொன்னன், பொருளாளராக சேதுராமன், மாவட்டத் துணைத் தலைவர்களாக முருகன், வெங்கடாசலம், நாராயணன், ராஜசேகர், சேட்டு, இணைச் செயலாளர்களாக விக்ரம் ராஜதுரை, கோபி, விஜயராஜ், திவாகர், மாவட்ட பிரச்சார செயலாளராக அப்துல்லா, மத்திய செயற்குழு உறுப்பினர்களாக பாலசுப்பிரமணியன், ராமதாஸ் ஆகியோர் இறுதியில் மாவட்ட பொருளாளர் சேதுராமன் நன்றி கூறினார்.




# பனை விதை நடவு பெருவிழா




புதுச்சேரி, அக். 27-

லயன்ஸ் கிளப் ஆஃப் பான்டிச்சேரி ஹோஸ்ட் நடத்தும் பனை விதை நடவு பெருவிழா நோனான்குப்பத்தில் நடந்தது. தலைவர் ஆரோக்கியதாஸ் தலைமை தாங்கினார். முன்னாள் ஆளுநர் செல்வகாந்தி முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் கலியமூர்த்தி மரம் நடுதல் முகாமை துவக்கி வைத்தார். விழாவில் கண்ணன், குப்பன், ரமேஷ், பால கிருஷ்ணர், பழனி, விஜய் ஆனந்து, கணேசன், புருஷோத்தமன், இருதயநாதன், இருதயராஜ், பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் தலைமையில் தன சுந்தராம்பாள் சாரிடெபுள் சொசைட்டி தன்னார்வலர்கள் மற்றும் பூக்கள் திருநங்கை குழுவினர் கலந்து கொண்டு சுமார் 1000 பனை விதைகள் நடவு நடைபெற்றது.

# We fired a shot first up against India in both games, says New Zealand skipper Tom Latham after series win

New Delhi, Oct.27-

New Zealand captain Tom Latham believes the trick behind the Black Caps winning their first-ever Test series in India was firing a shot first at the home team.

"We've played a style where we've fired a shot at India and we've been on the right side of a couple of tosses as well, that has been really important," Latham told the media after New Zealand's win in the second Test on Saturday. "The bowlers went to work over the last couple of days which has been very pleasing to see."With a win on Saturday, the Kiwis take an unassailable 2-0 lead in the three-match series, marking the first time India have a lost a home Test series in 12 years. Latham furthermore emphasized the importance of being on the right side of the toss and making the most of the conditions across the two games. "We've been on the right side of a couple of tosses. I think that (in second Test) was the first toss that I've won or been part of, since being here so that played a big part, especially in Bangalore," he said.



Having won the toss and opted to bat first, New Zealand restricted India for a mere 156 runs in response to their total of 259 in the first innings. Carrying a 103-run lead, the Kiwis put together 255 runs in the second innings and were able to restrict India for 245 on Day 3.

Mitchell Santner finished with 13 wickets across the Test match.

"Mitch has been at Chennai (Super Kings) for a long time, (he is) someone who been in our group for a long time, has played a reasonable amount of Test cricket and we know how good he is," Latham said.

"We know what he can produce and for him to come here and bowl the way that he's bowled over the last couple of days, the group is really proud of him," he added.

Going into the final Test match in Mumbai starting next week, the New Zealand skipper said he expects India to be at their best to close the series on a high note.

"They've got many match winners from 1 to 15 in their squad and sometimes it's the game we play, sometimes you can fall on the wrong side even if you play well. We'll certainly expect them to be at their best in Mumbai and the guys will be looking forward to that challenge," he said.

# பருவமழை முன்னேற்பாடு பணி ஆலோசனைக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது. அருகில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு) எடிசன்.

# அரசு சார்பில் மத்திய அமைச்சருக்கு வரவேற்பு



புதுச்சேரி, அக். 27–

புதுச்சேரிக்கு வருகை தந்த மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மனோகர் லாலை கவர்னர், முதலமைச்சர், சபாநாயகர் வரவேற்றனர்.

மத்திய மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு துறை அமைச்சர் மனோகர் லால் நேற்று புதுச்சேரிக்கு வருகை தந்தார். கவர்னர் மாளிகை வந்த அவரை முதலமைச்சர் ரங்கசாமி பூங்கொத்து கொடுத்து, சால்வை போர்த்தி நினைவு பரிசு வழங்கி வரவேற்றார்.

முன்னதாக கவர்னர் கைலாஷ்நாதன், சபாநாயகர் செல்வம் ஆகியோர் மத்திய அமைச்சரை வரவேற்றனர். இதேபோல் பு ச்சேரி விமான நிலையத்திற்கு வந்தபோது மத்திய அமைச்சர் மனோகர் லாலை, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், தலைமைச் செயலர் சரத் சவுகான், அரசு செயலர் கேசவன், கலெக்டர் குலோத்துங்கன், சீனியர் எஸ்.பி., நாரா சைதன்யா வரவேற்றனர்.

# மத்திய அரசின் திட்டங்களில் புதுச்சேரி அரசு இலக்கை தாண்டி சாதனை

## மத்திய அமைச்சர் பாராட்டு



புதுச்சேரி, அக். 27–

மத்திய அரசின் வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களில் இலக்கை தாண்டி புதுச்சேரி அரசு சாதனை படைத்துள்ளது என, மத்திய அமைச்சர் மனோகர் லால் பாராட்டு தெரிவித்தார்.


மத்திய மின்சாரம் வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற மேம்பாட்டு துறை அமைச்சர் மனோகர் லால் நேற்று புதுச்சேரிக்கு வருகை தந்தார். இதனைத் தொடர்ந்து கவர்னர் மாளிகையில் ஆய்வு கூட்டம் நடந்தது. கவர்னர் கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி, உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், அரசு செயலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உள்ளாட்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து படகாட்சிகளுடன் துறை செயலர் ஜவஹர் பட்டியலிட்டார்.

இதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் மனோகர் லால் பேசியதாவது, புதுச்சேரி சிறிய மாநிலம் என்றாலும் மத்திய அரசின் வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப் பட்டுள்ளது. மத்திய அரசு கொடுத்த இலக்கை தாண்டி நலத் திட்டங்களை செயல்படுத்தி சாதித்துள் ளது. இதற்கு பாராட்டுக்கள். தெருவோர வியாபாரி களுக்கு அதிக அளவில் கடனுதவி செய்யப் பட்டுள்ளது. இதுவும் வரவேற்கக் கூடியது. இதன் மூலம் தெருவோர வியாபாரிகள் பொருளா தார ரீதியாக மேம்படுத்தப் பட்டுள்ளனர்.

இது போன்ற திட்டங்களை புதுச்சேரி மாநிலம் சார்பில் கேளுங்கள். அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து கொடுக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

# உலக சுற்றுலா பயண பட்டியலில் புதுச்சேரிக்கு 2ம் இடம்



புதுச்சேரி, அக். 27–

சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள புதுச்சேரி உலக சுற்றுலா பயண பட்டியலில் 2ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

புதுச்சேரிக்கு சுற்றுலா வருவோர் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. புதுவையில் உள்ள பாரம்பரிய கட்டடங்கள், அழகிய கடற்கரை, படகு குழாம், அரவிந்தர் ஆசிரமம், மணக்குள விநாயகர் கோவில் தொடங்கி பல்வேறு ஆன்மிக இடங்களில் சுற்றுலா பயணிகள் தினந்தோறும் குவிந்து வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு சுற்றுலா பணிகள் வருகை தர விடுதிகளில் முன்பதிவு செய்து வருகின்றனர். இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் தேடப்படும் மாநிலமாக புதுச்சேரி திகழ்கிறது.

ஆஸ்திரேலியா நாட்டினைச் சேர்ந்த லோன்லி பிளானட் என்ற பயண ஊடக நிறுவனம், 2025ம் ஆண்டிற்கான சிறந்த பயண இடங்களை வரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளது.

லோன்லி பிளானட்டின் பயண வழிகாட்டியில் 30 பிரபலமான இடங்கள், நகரங்கள், நாடுகள் மற்றும் பிராந்தியங்களை சுற்றுலாப் பயணிகள் புத்தாண்டில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்கள் என குறிப்பிட்டுள்ளது. அதன்படி சிறந்த நகரங்கள் பட்டியலில், பிரான்ஸ் நாட்டின் துலூஸின் கால்வாய் கரைகள் முதல் இடத்தை பிடித்துள்ளது.

அடுத்தபடியாக இந்தியாவில் புதுச்சேரி கடற்கரை 2ம் இடத்தை பிடித்துள்ளது. பல்கேரியாவின் பான்ஸ்கோ 3ம் இடம் பிடித்துள்ளது. சர்வதேச அளவில் புதுச்சேரி இடம் பிடித்துள்ளது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் கூறும்போது, 'இந்தியாவில் சுற்றுலா பயணிகள் விரும்பும் இடமாக புதுச்சேரி உள்ளது என்று கடந்த ஆண்டு தரவுகள் தெரிவித்தன.

மேலும், கடந்தாண்டு ஆகஸ்ட் மாத விடுமுறை காலத்தில் புதுச்சேரி ஓட்டலில் புக்கிங் என்பது 400 சதவீதம் உயர்ந்திருந்தது என்று மற்றொரு தரவுகளும் தெரிவித்தன.

இப்போது உலக சுற்றுலா பயணப்பட்டியலில் புதுச்சேரி இரண்டாம் இடத்தில் உள்ளது. மாநிலத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். இது புதுச்சேரி சுற்றுலா வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு. புதுச்சேரி சுற்றுலா பயணிகளின் விருப்பமான இடம் என்பதும், இதன் மூலம் புதுச்சேரியின் பொருளாதாரம் தொடர்ந்து உயர்ந்து வருவதும் உறுதியாகியுள்ளது.

முதலமைச்சர் ரங்கசாமி தலைமையான புதுச்சேரியின் வெற்றிகரமான சுற்றுலா திட்டங்களால் உலக அளவில் தனித்துவமான இடத்தினை பெற்றுள்ளது.' இவ்வாறு அவர் கூறினார்.

# நில அளவை, பதிவேடுகள் துறை ஆய்வுக் கூட்டம்

புதுச்சேரி, அக். 27–

புதுச்சேரி கலெக்டர் அலுவலகத்தில் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை ஆய்வுக்கூட்டம் நடந்தது.

புதுச்சேரியில் நில அளவீடு பணிக்கான தேவை கடந்த காலங்களைவிட தற்போது பல மடங்கு அதிகரித்துள்ளது. நில அளவையர் பற்றாக்குறை காரணமாக நில அளவீட்டுப்



பணியை துரிதமாக செயல்படுத்த இயலவில்லை.

இதனை துரிதப்படுத்த உரிமம் பெற்ற நில அளவையர் மற்றும் நில வரைவாளர்களை ஈடுபடுத்த விதிகள் உருவாக்கப்பட்டு கடந்த 2020ல் அரசாணை வெளியிடப்பட்டது.

ஆனாலும், இதை முழுமையாக செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்த நிலையில் குறைகளை சரி செய்வதற்கான கருத்து கேட்புக் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் மனுக்களை பெறுதல், அனுப்புதல், கட்டணம் நிர்ணயித்தல், செயல்படுத்துவதற்கான காலக்கெடு, கணக்கெடுப்பு பணியின் குறுக்கு சோதனை, தணிக்கை போன்ற காரணங்களை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் நில அளவைத் துறை இயக்குனர் செந்தில்குமார் மற்றும் மாவட்ட துணை கலெக்டர்கள், பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கம்பைநல்லூர் ஸ்ரீராம் பப்ளிக் பள்ளி மாணவர்கள் மல்யுத்த போட்டியில் மாநில அளவில் சாதனை



தருமபுரி, அக். 27–

மாநில அளவிலான மல்யுத்த போட்டி சென்னை வேளச்சேரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மாநில அளவில் பல்வேறு பள்ளி மாணவ, மாணவியர்கள் மல்யுத்த போட்டியில் கலந்து கொண்டனர். இப்போட்டியில் 12 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் பிரிவில் தர்மபுரி மாவட்டம், கம்பைநல்லூர் ஸ்ரீராம் பப்ளிக் பள்ளியில் 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் மாணவர் சி.கீர்த்திகா மாநில அளவில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கமும், மாணவர் எஸ்.லோகேஷ் மாநில அளவில் 2ஆம் இடம் பெற்று வெள்ளி பதக்கமும், மாணவர் பி.எஸ் யேஸ்வந்த் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கல பதக்கமும் பெற்று மாநில அளவில் சாதனை படைத்துள்ளனர். மல்யுத்த போட்டியில் மாநில அளவில் சாதனை படைத்த மாணவர்களை ஸ்ரீராம் கல்வி குழுமங்களின் நிறுவனர் எம்.வெடியப்பன், தாளாளர் சாந்தி வேடியப்பன், பள்ளி நிர்வாக இயக்குனர்கள் வே.தமிழ்மணி, பவானி தமிழ்மணி முதல்வர் வெற்றிவேல் செல்வம், பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் மற்றும் மல்யுத்த ஆசிரியர் ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

# கலசலிங்கம் பல்கலையில் 23வது பட்டமளிப்பு விழா



சங்கரன்கோவில், அக். 27–

ஸ்ரீ வில்லிபுத்தூர் கிருஷ்ணன்கோவில், கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23வது பட்டமளிப்பு விழா, கலசலிங்கம் கல்விக் குழுமங்களின் தலைவர் முனைவர் க.ஸ்ரீதரன், தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். கோபால கிருஷ்ணன், வரவேற்று ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். 2020–2023ல் பயின்ற பி.ஏ., பி.எஸ்.சி., பி.சி.ஏ., பி.காம்., எம்.காம்., எம்.எஸ்.சி., மாணவர்கள் 498 பேருக்கு பட்டங்களையும், பல்கலை தரவரிசையில் இடம்பெற்ற 21 பேருக்கு தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், கல்லூரியின் செயலாளர் டாக்டர். எஸ். அறிவழகி, துணைத்தலைவர் எஸ். சசி ஆனந்த், வாழ்த்துரை வழங்கினார். "உலக மாற்றத்திற்கேற்ப மாணவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்", மேலும் தொடர்ந்து தங்கள் துறையிலும், வேலையிலும் வளர்ந்து வரும் முன்னேற்றத்தை அறிந்து கொண்டு அதனைப் பயன்படுத்துவது, தங்கள் படிக்கின்ற கல்லூரிக்கும், பெற்றோருக்கும், மக்களுக்கும் இயன்ற அளவு உதவி புரிவதும் மாணவர்களின் முக்கிய கடமைகள் என்று அறிவுரை வழங்கினார் துணைத்தலைவர். விழா ஏற்பாடுகளை துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

# அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்

புதுக்கோட்டை, அக். 27–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. பள்ளி மேலாண்மை குழு தலைவி கலாராணி தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி அனைவரையும் வரவேற்றார். ஊராட்சி மன்ற தலைவர் கங்காதரன், மருத்துவர் சுவாமிநாதன் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பிரியா, சுதா, மகேஸ்வரி, ரமேஷ் குமார், சாரங்கபாணி, பழனிவேல், சுந்தரபாண்டியன், இளையராஜா, சீனிவாசன், சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




பள்ளி மேலாண்மை குழு கூட்ட பொருளாக போதை பொருள் இல்லாத தமிழ்நாடு என்ற தலைப்பில் சமூக சீர்கேடுகளில் போதைப்பொருள் பயன்பாடு மிக முக்கியமானதாக உள்ளது.

ஆரோக்கியமான மாணவர் சமுதாயத்தை சீரழிக்கும் போதைப் பொருள்கள் மற்றும் அவற்றால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதன் மூலம் எதிர்கால சமூகம் போதை பொருள் பயன்பாடு இல்லாத சமூகமாக உருவாகும் எனவும், பள்ளி அளவில் போதைப்பொருள் பயன்பாடு எதிர்ப்பு குழு, பள்ளிகளில் போதை பொருள் பயன்பாடு எதிர்ப்பு மன்றங்களை உருவாக்கப்படுதலை உறுதி செய்ய வேண்டும், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிப்பது, மாணவர்கள் விளையாட்டு பயிற்சிகள் மேற்கொள்ள தேவையான விளையாட்டு பொருட்கள், விளையாட்டு மைதானம் மற்றும் முறையான பயிற்சியாளர் போன்ற ஏற்பாடுகள் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் மூலம் பெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதன் சாதக பலன்கள் குறித்து விழிப்புணர்வை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே ஏற்படுத்த வேண்டும். திறந்தவெளி மலம் கழிப்பதால் பொது சுகாதாரம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு பல வகையான தொற்றுநோய்கள் ஏற்பட மிக முக்கிய காரணியாக உள்ளது. பள்ளி வளாகம் பள்ளிக்கு வரும் வழியில் தெருக்களில் பொது இடங்களில் மலம் கழிப்பதை தடுத்தல் வாயிலாக பொது சுகாதாரத்தை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் மணிமேகலை, ரகமதுல்லா, சந்தியா, நிவின், வெள்ளைச்சாமி, செல்வி ஜாய், சகாய ஹில்டா, கணினி ஆய்வக பணியாளர் தையல்நாயகி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# கம்பைநல்லூர் ஸ்ரீராம் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் தடகள போட்டியில் சாதனை



தருமபுரி, அக். 27-

தர்மபுரி மாவட்டம், கம்பைநல்லூர் ஸ்ரீராம் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் மாணவர் கார்த்திகேயன் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் மற்றும் தட்டு எறிதல் ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். 14 வயதுக்குட்பட்ட மாணவியர்கள் பிரிவில் மாணவி ரீனா ஸ்ரீ தட்டு எறிதலில் முதலிடம் பெற்றார். 17 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் விவின் குமார் 100 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் முதலிடம், நீளம் தாண்டுதல் போட்டியில் 3ஆம் இடமும், அதே பிரிவில் ஜனார்த்தனன் தட்டு எறிதலில் 2ஆம் இடமும் பெற்றார். 17 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் மாணவி மோனிஷா 100 மீட்டர் தடை தாண்டுதல், மும்முறை தாண்டுதல் ஆகிய போட்டிகளில் முதலிடமும், நீளம் தாண்டுதலில் 3ஆம் இடமும் பிடித்து சாதனை படைத்தார். அ

தே பிரிவில் மாணவி ரவீனா தட்டு எறிதல் போட்டியில் முதலிடமும், குண்டு எறிதல் போட்டியில் 3ஆம் இடமும் பிடித்தார். 19 வயதுக்குட்பட்ட மாணவியர் பிரிவில் மாணவி லேகா ஸ்ரீ தட்டு எறிதலில் முதலிடம் பிடித்து சாதனை படைத்தார். தடகளப் போட்டியில் மாவட்ட அளவில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவ, மாணவிகளை ஸ்ரீராம் கல்வி குழுமங்களின் நிறுவனர் எம்.வேடியப்பன், தாளாளர் சாந்தி வேடியப்பன், பள்ளி நிர்வாக இயக்குனர்கள் வே.தமிழ்மணி, பவானி தமிழ்மணி பள்ளி முதல்வர் சாரதி மகாலிங்கம், கல்வி இயக்குனர் ஜான் இருதயராஜ் ஆகியோர் பாராட்டினார்கள்.

மேலும் மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் புவனேஸ்வரி, திருப்பதி, தினேஷ், அருண் பிரசாத், ராஜதுரை ஆகியோரையும் பள்ளி நிர்வாகத்தினர் பாராட்டினார்கள்.

# தென்கரைக்கோட்டை, ராமியாண அள்ளி பகுதிகளில் உணவு பாதுகாப்பு துறையினர் திடீர் ஆய்வு

தருமபுரி, அக். 27-

தருமபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா தலைமையில் மாவட்டம் மொரப்பூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் (பொறுப்பு) நந்தகோபால் கோபிநாதம்பட்டி கூட்ரோடு போலீஸ் சப் – இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜன் மற்றும் குழுவினர் கடத்தூர் ஒன்றியம், தென்கரைக்கோட்டை, ராமியண அள்ளி, சிந்தல்பாடி, குருபர அள்ளி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மளிகை கடைகள், தேநீர் கடைகள், பெட்டி கடைகள், பேக்கரிகள், இனிப்பு காரம் தயாரிப்பு, விற்பனை இடங்களில் ஆய்வு செய்தனர்.



ஆய்வின்போது ராமியண அள்ளி அரசு துவக்கப்பள்ளி அருகில் ஒரு மளிகை கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு கடை இயங்க தடை விதித்து உடனடி அபராதம் ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் ஆய்வின் போது அதே பகுதியில் உள்ள ஒரு மளிகை கடை மற்றும் பேக்கரியில் காலாவதியான ஜங்க் ஃபுட் ஐட்டங்கள், உரிய விபரங்கள் இல்லாத மளிகை பொருட்கள், தின்பண்டம் உள்ளிட்ட பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு தலா ரூ.ஆயிரம் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் ஒரு பல்பொருள் அங்காடியில் தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கிய எறியப்படும் நெகிழி கவர்கள் பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டடு ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தென்கரை கோட்டையில் பேக்கரியுடன் இணைந்த தேநீர் கடையில் தேயிலை தர ஆய்வில் கலப்படம் கண்டறியப்பட்டு ஒரு கிலோ அளவிலான தேயிலை தூள் அழிக்கப்பட்டது. கடைக்காரருக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கி ரூ.2 ஆயிராம் அபராதம் விதிக்கப்பட்டு கலப்பட தேநீர் தூள் வாங்கிய இடம் குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பேக்கரியில் உரிய முடிவு தேதி இல்லாத தயிர் மற்றும் பால் பாக்கெட்டுகள் அப்புறப்படுத்தப்பட்டது. ஆய்வில் தீபாவளியை யொட்டி இனிப்பு, காரம் தயாரிக்கும் மற்றும் விற்பனை இடங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து சுற்றுப்புற சுகாதாரம், தன் சுத்தம் பராமரிப்புடன் உரிய வழிமுறைகள் அடங்கிய பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு செய்யப்பட்டது.

# வீடுதோறும் மதி பொருட்கள் விற்பனை ஆட்சியர் துவக்கி வைத்தார்

திருவண்ணாமலை, அக். 27-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் திருவண்ணாமலை வட்டம், தென்மாத்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் திட்டம் சார்பாக மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் வீடுதோறும் மதி பொருட்கள் விற்பனையை செய்தியாளர்களுடன் சென்று துவக்கி வைத்து, மகளிர் சுய உதவிக்குழுக்கள் விற்பனை பொருட்களை பார்வையிட்டார்கள்.



இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் திட்டம் சார்பாக வீடுகள் தோறும் மதி பொருட்கள் என்ற திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் உள்ள 860 ஊராட்சிகளிலும், ஒரு ஊராட்சிக்கு இரண்டு பெட்டகங்கள் என்ற அடிப்படையில் சுமார் 1720 பெட்டகங்கள் ஊராட்சிகளுக்கு அனுப்பப்பட உள்ளது. தற்பொழுது வரை 644 பெட்டகங்கள் அனுப்பப் பட்டுள்ளது. ஒவ்வொரு பெட்டகத்திலும் வீட்டிற்கு தேவையான 28 பொருட்கள் அடங்கியுள்ளன. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 2027 அரசு பள்ளிகளுக்கு வேண்டிய தூய்மை செய்யும் பொருட்கள் ரூபாய் ஏழு லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி 100 லிட்டர் மணிலா மரச்செக்கு எண்ணெய் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனுப்பப்பட்டு, தரமான பொருட்கள் பயன்படுத்துவதை நோக்கமாக கொண்டு மகளிர் சுய உதவிக்குழுக்கள் பயனடையும் வண்ணம் பல்வேறு வீட்டு உபயோகப் பொருட்கள், எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள், துணிவகைகள், பூஜை பொருட்கள், உணவு பொருட்கள், மலை பொருட்கள், பாய் பொருட்கள், சிறு தானிய வகைகள், குளியல் பொருட்கள் மற்றும் மசாலா பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதுவரையில் ஒட்டு மொத்தமாக ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ.6.83 கோடி மதிப்பீட்டிலான பொருட்கள் ஊராட்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தியாளர்களுக்கு ரூ.8 கோடி விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வீடுதோறும் மதி பொருட்கள் என்ற அடிப்படையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் உற்பத்தி செய்கிற பொருட்கள் ஊராட்சிகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இதன் சிறப்பம்சமாக மாவட்ட அளவில் எம்ஆர், எம்ஐ போன்ற மாற்றுத்திறனாளி களை கொண்ட கொள் முதல் குழு அமைக்கப்பட்டு, இந்த குழுவின் மூலம் நுகர்வு செய்யப்பட்ட பொருட்கள் கிராம ஊராட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதன்மூலம் கிடைக்கின்ற இலாபத் தொகையில் 2 சதவீதம் மாவட்ட கொள் முதல் குழுவில் உள்ள 20 மாற்றுத்திறனாளிகளுக்கு சென்றடைகின்றது. இக்குழுவில் உள்ள 20 மாற்றுத்திறனாளி நபா;களும் எம்ஆர், எம்ஐ போன்ற மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள். மேலும் இந்த குழுவானது விரிவுப் படுத்தப் படவுள்ளது.

தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்தில், தீபாவளியை முன்னிட்டு வீடுகள் தோறும் மகளிர் திட்டம் பொருட்களை ஊராட்சிகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.

இதன் மூலமாக மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள அனைத்து மகளிர்களுக்கும் லாபகரமானதாக அமையும். அதுமட்டுமின்றி மாற்றுத்திறனாளி நபர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். எனவே இது ஒரு முன்னோடி திட்டமாக அமையும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்கள்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி செய்யும் மரச்செக்கு எண்ணெயினை வருவாய் துறை அலுவலா;கள் மற்றும் ஊரக வளர்ச்சிதுறை அலுவலர்கள் உதவியுடன் பணியாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் சிறப்பு விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மணி மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த சிறப்பு முகாம்

புதுச்சேரி, அக். 27-

இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுச்சேரி நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது குறித்த முகாமினை மாலை 4 மணிக்கு போக்குவரத்துத் துறை காவல் கண்காணிப்பாளர் பிரவின் திருப்பாதி மற்றும் புதுச்சேரி நாட்டு நலப் பணித் திட்ட அதிகாரி முனைவர் சதிஷ்குமார் துவக்கி வைத்தனர். புதுச்சேரியின் முக்கிய சாலைகளான முருகா தியேட்டர் சிக்னல் ராஜா தியேட்டர் சிக்னல் இந்திரா காந்தி சிலை சிக்னல் மற்றும் நேரு வீதி போன்ற பகுதிகளில் இதயா மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்ட மாணவிகள் 40 பேர் பங்கேற்று பாதுகாப்போடு போக்குவரத்து விதி முறைகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு உதவி கரம் நீட்டினர். தீபாவளி மற்றும் மை பாரத் போர்டலும் இணைந்து இந்நிகழ்வினை நடத்தினர்.

மாணவிகள் கலந்து கொண்டு பணிகளைச் சிறப்பாக செவ்வனே செய்தார்கள். இந்த நிகழ்வின் முழு ஏற்பாட்டினை இதயா மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கண்ணகி செய்தார்.

# போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பு தொடக்கம்



கடலூர், அக். 27-

கடலூர் கடலூர் மாவட்டத்தில் உள்ள 14 வட்டாரங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பயிற்சி மையத்தில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்விக்கான போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை தொடங்கி வைக்கும் விதமாக கடலூர், வண்டிப்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி மையத்தில் இப்போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தும், மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகள் எழுத விருப்பமுள்ள மாணவர்களை இத்தேர்வுகளுக்கு தயார்படுத்துவதற்காக முதற்கட்டமாக 15 மாவட்டங்களில் இருந்து உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதி இருக்ககூடிய 87 மேல்நிலைப்பள்ளிகள், வட்டார அளவில் உயர் கல்வி வழிகாட்டி மையங்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இம்மாணவர்களின் உயர்கல்வி விருப்பத்திற்கேட்ப உரிய பயிற்சி வழங்கவும் அவ்விருப்பத்தினை பள்ளி Educational Management Information System (EMIS) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு வட்டார உயர்கல்வி வழிகாட்டும் மையங்களில் சனிக்கிழமைகளில் நடைபெறும் பயிற்சியில் கலந்துகொண்டு உயர்கல்வி சேர்க்கைக்கான பல்வேறு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பெற்றுக்கொண்டு போட்டித்தேர்வுகளுக்காக தங்களை தயார்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு ஒரு பள்ளி வீதம் 14 வட்டத்திற்கு 14 பள்ளிகளில் 1,947 மாணவ, மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் 1,695 மாணவ, மாணவிகளுக்கு இன்று பயிற்சி வகுப்பில் பங்கேற்றனர். மேலும், ஒவ்வொரு சனிக்கிழமையும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும்வரை இந்த பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடைபெற உள்ளது.

அதன்படி, கடலூர் மாவட்டத்தில் அரசு பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் வருங்காலத்தில் தங்களது உயர்கல்விக்கான துறையை தேர்ந்தேடுப்பது மற்றும் அத்துறைக்கான நுழைவு தேர்வு குறித்து வழிகாட்டும் வகையிலும் இப்பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. மாணவர்கள் தங்களது உயர்கல்வி குறித்த இலக்கினை அடைவதற்கு உதவிபுரியும் வகையில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும் என தெரிவித்தார்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் சனிக்கிழமைகளில் உயர்கல்வி வழிகாட்டி மையங்களுக்கு சென்று வழங்கப்பட்டுள்ள பயிற்சிக் கானகால அட்டவணைப் படி பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் எள்ளப்பன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

புதுக்கோட்டை, அக். 27-

புதுக்கோட்டை பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக, நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும், மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் வழங்கினார்கள். இதில் மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (மதுரை) ஜோதிமணி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஸ்ருதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் மணிகண்டன், வேல்முருகன் (தொ.வ), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



# சுயஉதவிக்குழு வங்கி கடன் திட்டம் மூலம் கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய முதல்வர்

## மதுரை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



மதுரை, அக். 27-

தமிழ்நாடு அரசு பெண்கள் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, பெண் கல்வியை ஊக்குவித்திடும் வகையில், பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற்று தன்னம்பிக்கையோடு சமூகத்தில் முன்னேற வேண்டும் என்ற நோக்கிலும் பல்வேறு அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட பொருளாதாரத் தன்னிறைவு பெறவேண்டும் என்பதை இலக்காக கொண்டு இந்தியா விலேயே முதன் முதலில் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்த பெருமை முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரையே சேரும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மகளிர் தாமாக முன்வந்து குழுவாக ஒருங்கிணைந்து தங்களது சேமிப்பை பெருக்கிடவுடம், குழு மேம்பாட்டிற்கான வழிவகைகளை ஏற்படுத்தப்படுகிறது.

அதன்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சமூக, பொருளாதார மேம்பாடு அடையவும் மேலும் அரசியல் அதிகாரம் பெற உதவிடும் வகையிலும். இந்திய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்துகிறது. இத்திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நிதி உதவி வங்கிகளின் மூலம் கடனாக பெற வழிவகை செய்கிறது. மதுரை மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 7,353 மகளிர் சுய உதவிக் குழுக்களும், நகர்புறப் பகுதிகளில் 12.733 மகளிர் சுயஉதவிக்குழுக்களும் என மொத்தம் 20,086 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மதுரை மாவட்டத்திற்கு 2024–2025ஆம் நிதியாண்டில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்பு திட்டத்தின் மூலம் மொத்தம் ரூ.1.440 கோடி மதிப்பீட்டில் கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், அக்டோபர் 2024 வரை 9,694 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.816.77 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக, ஊரகப்பகுதிகளில் உள்ள 4,533 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.385.10 கோடி மதிப்பீட்டிலும், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 5.161 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.431.67 கோடி மதிப்பீட்டிலும் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணயித்துள்ள இலக்கை பூர்த்தி செய்திடும் வகையில் அதிகளவில் புதிய மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு கடனுதவிகள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகளிர் சுயஉதவிக்குழுவின் வாயிலாக பயனடைந்த மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், குலமங்கலம் ஊராட்யை சேர்ந்த ஜெயவிக்னேஸ்வரி தெரிவித்ததாவது: நான் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குலமங்கலம் ஊராட்சியில் வசித்து வருகிறேன்.



எங்களுடைய சுயஉதவிக்குழுவின் பெயர் மதி ஸ்ரீ மதுரை மீனாட்சி ஆகும். கிராமப்புறத்தில் வசிக்கும் பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு தமிழ்நாடு அரசு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு எங்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்காக இடவசதி மற்றும் மிஷின்களை உரிய முறையில் அமைத்து கொடுத்திருக்கிறது. மேலும், மரச்செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் மகளிர் குழு என்ற பெயரில் சிறுதொழில் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த குழுவில் 6 நபர்கள் உள்ளோம். இந்த தொழில் தொடங்குவதற்கு முன்பாக எங்களுக்கு தமிழ்நாடு அரசின் மூலம் 40 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. மேலும். இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றபின் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இத்தொழில் தொடங்குவதற்கு மூலதனமான பொருட்களை வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு மகளிர் சுயஉதவிக்குழு மூலமாக ரூபாய் 1 லட்சத்து 30 ஆயிரம் கடனுதவியாக வழங்கியது. இத்தொழில் தொடங்குவதற்கு முன்பாக நாங்கள் தங்களுடைய வீட்டில் உள்ள வேலைகளை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தோம். தற்போது, தமிழ்நாடு அரசு அமைத்துக் கொடுத்த இத்தொழில் வாயிலாக எங்களுடைய வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது. கிராமப்புற பெண்களின்



வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய சார்பாகவும், எங்களுடைய மதி ஸ்ரீ மதுரை மீனாட்சி மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுயஉதவிக்குழுவின் வாயிலாக பயனடைந்த மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, பேச்சிக்குளம் ஊராட்சி, கீழப்பனங்காடி கிராமத்தை சேர்ந்த நித்திய ஜோதி தெரிவித்ததாவது: நான் மதுரை மேற்கு ஊராட்சி பேச்சிக்குளம் ஊராட்சிக்கு ஒன்றியம். உட்பட்ட கீழப்பனங்காடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்களுடைய குழுவின் பெயர் தாமரை மகளிர் சுயஉதவிக்குழு ஆகும். இக்குழுவானது 12 நபர்களுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களில் வசித்து வரும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கிராமத்திலும் சிறுதொழில் அமைத்துக் கொடுத்துள்ளது. அதனடிப்படையில், சாம் பிரசாத் முகர்ஜி என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசு எங்களுக்கு மதி மின் உலர் சலவை நிலையத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. இதற்குமுன் எங்களுடைய குடும்பத்தினை சிரமத்துடனே நடத்தி வந்தோம். தற்போது, தமிழ்நாடு அரசால் அமைத்துக்கொடுத்த இந்த மதி மின் உலர் சலவை நிலையத்தின் வாயிலாக வரும் வருமானத்தின் வாயிலாக எங்களுடைய குடும்பத்தை ஓரளவிற்கு சிரமமின்றி நடத்துவதற்கு உதவியாக உள்ளது. எனவே, கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களில் இணைந்தால் என்னைப்போலவே பயனடையலாம். மேலும், தமிழ்நாடு அரசு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அதிகளவில் கடனுதவிகள் வழங்கி வருகிறது. கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இத்தகைய திட்டத்தினை செயல்படுத்தி எங்களுடைய வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய சார்பாகவும், எங்களுடைய தாமரை மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:-
**சாலி தளபதி**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**கயிலைச் செல்வம்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.

# தாட்கோ மூலம் கடன் வழங்கி எளிய மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய முதல்வர்

## திருவண்ணாமலை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி

புதுச்சேரி, அக். 27-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் (THADCO) பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது, 1974இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகம் தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் (SC) மற்றும் பழங்குடியினர் (ST) சமூகங்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு துணையாக உள்ளது, நான்கு தசாப்தங்களுக்கு மேலாக பலதரப்பட்ட திட்டங்கள் மற்றும் முன் முயற்சிகளை வழங்குவதன் மூலம் இந்த சமூகங்களை மேம்படுத்துவதில் தாட்கோ முக்கிய பங்கு வகிக்கிறது, தாட்கோ வறுமை கோட்டிற்கு கீழ் வரும் மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்கிறது. இதன் முக்கிய நோக்கம் பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினர்கள் (SC/ST) மறுவாழ்வு மற்றும் அதிகாரம் அளிப்பதாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு தரப்பட்ட மக்களின் நலனுக்காக சிறப்பான திட்டங்களில் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். மேலும் பெண்கள், மாணவர்கள், தொழில்துறையினர், விவசாயிகள், தொழிலாளர்கள், தொழில் முனைவோர், கைவினை கலைஞர்கள் மற்றும் கலைப் பண்பாட்டு துறையினர் என பல்வேறு துறையினருக்கும் சிறப்பான மக்கள் நல திட்டங்களை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திட்டங்களை செயல்படுத்தி அவர்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார். மேலும் எஸ்சி மற்றும் எஸ்டி மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்று அவர்கள் சுயதொழில் புரிய மானியத்துடன் கடனுதவிகள் அதிகளவில் தாட்கோ மூலமாக வழங்கப்பட்டு வாழ்வாதாரம் மேம்பட உதவி வருகிறார்.

தாட்கோ வாயிலாக மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் (LPS), நிலம் மேம்பாட்டு திட்டம் (LAS), ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு திட்டம், தொழில் முனைவோர் திட்டம் (EDP), இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEPY) மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார நிதி திட்டம் (EA to SHG) போன்ற பல்வேறு திட்டங்கள் எஸ்சி, எஸ்டி மக்களின் நலனுக்காக செயல்படுத்தி வருகிறது. மேலும் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தொழில் முன்னோடி திட்டம் வாயிலாக SC/ST வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு உற்பத்தி, சர்வீஸ்,



வர்த்தகம் (வியாபாரம்) போன்றவைகளுக்கு விண்ணப்பிக்கலாம், இதன் மூலம் திட்டத்தொகையில் 35%, அதிகபட்சமாக ரூ.350000 இதில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கப்படும்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தாட்கோ மூலம் 2023 2024ம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் (CM -ARISE) மூலம் 81 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 52 இலட்சத்து 31 ஆயிரத்து 728 மதிப்பீட்டிலும், பிரதான் மந்திரி அன்சுசிட் ஜாட் அபியுதே யோஜனா திட்டம் (றிவிகியிகிசீ) மூலம் 511 நபர்களுக்கு ரூ. 2 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டிலும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம் (SHG - EA) மூலம் 21 குழுக்களைச் சார்ந்த 252 மகளிர்களுக்கு ரூ. 52 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், தொழில்முனைவோர் திட்டம் (EDP) மூலம் 1352 பயனாளிகளுக்கு ரூ.15 கோடியே 46 இலட்சத்து 93 ஆயிரத்து 764 மதிப்பீட்டிலும், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம் (SEPY) மூலம் 59 நபர்களுக்கு ரூ. 97 இலட்சத்து 25 ஆயிரத்து 614 மதிப்பீட்டிலும், மகளிர் நிலம் வாங்கும் திட்டம் (LP) மூலம் 1 பயனாளிக்கு ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்து 28 மதிப்பீட்டிலும், நிலம் மேம்பாட்டு (LD) திட்டத்தின் மூலம் 3 நபர்களுக்கு ரூ.3 லட்சத்து 61 ஆயிரத்து 200 மதிப்பீட்டில் என மொத்தம் 2028 பயனாளிகளுக்கு ரூ. 21 கோடியே 33 லட்சத்து 72 ஆயிரத்து 334 மதிப்பிலான கடனுதவிகள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் (எஸ்சி ) மற்றும் பழங்குடியினர்களுக்கு (எஸ்டி) வழங்கப்பட்டுள்ளது.

தாட்கோ வாயிலாக கடனுதவி பெற்று டிஜிட்டல் ஸ்டுடியோ நடத்திவரும் வெங்கடேசன் என்பவர் தெரிவித்ததாவது, நான் செய்யாறு வட்டம், கீழ் மட்டை ஊராட்சிக்குட்பட்ட ஞானமுருகம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எங்களது கிராமத்தில் விவசாய பணிகளை செய்து வந்தேன். பின்பு தாட்கோ மூலம் சுயத்தொழில் செய்ய மானியத்துடன் கடன் உதவிகள் வழங்கப்படுகிறது என்பதை அறிந்து எங்களது கிராமத்தில் டிஜிட்டல் ஸ்டுடியோ வைக்க கடன் உதவி பெறுவதற்காக விண்ணப்பம் செய்திருந்தேன். எனக்கு வங்கி மூலம் ரூ.6 லட்சமும் தாட்கோ சார்பாக ரூ.3,50,000 மானியமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் நான் எனது கிராமத்தில் டிஜிட்டல் ஸ்டுடியோ ஆரம்பித்து சிறப்பாக நடத்தி வருகிறேன். இதில் வரும் வருமானம் எனது வாழ்வாதாரத்திற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. இதுபோன்ற எண்ணற்ற கடனுதவிகள் வழங்கி எங்களைப் போன்ற ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது கொள்கிறேன்.

தாட்கோ மூலம் கடனுதவி பெற்று ஆட்டோ ஓட்டி வரும் அகிலன் என்பவர் தெரிவித்ததாவது, தந்தை பெயர் ரவீந்திரன். எனக்கு திருமணம் ஆகி இரண்டு மகள்கள் உள்ளனர். நாங்கள் திருவண்ணாமலை கல்நகரில் வசித்து வருகிறோம். வாடகைக்கு ஆட்டோ எடுத்து பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவர் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுவதை அறிந்து சொந்தமாக ஆட்டோ வாங்க விண்ணப்பம் அளித்திருந்தேன். எனக்கு வங்கி திருவண்ணாமலை நகரில் ஒட்டி வந்தேன். தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் வழங்கப்பட்டது. தற்போது நான் சொந்தமாக ஆட்டோ வாங்கி இயக்கி வருகிறேன். இது எனது மூலம் ரூ.06 இலட்சம் வழங்கப்பட்டது. அதில் ரூ.3,50,000 தாட்கோ சார்பாக மானியமாக குடும்பத்திற்கும் எனக்கும் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. தாட்கோ சார்பாக எங்களை போன்ற எளிய மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மாவட்ட நிர்வாகத்துக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:-
**சரவணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# குஜராத்தில் ராணுவ விமான உற்பத்தி ஆலையை திறந்து வைக்கிறார் மோடி

# விஜய் மாநாடு-விக்கிரவாண்டியில் குவியும் தவெக தொண்டர்கள்



# 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை சிறைபிடிப்பு


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 27-10-2024 ஞாயிற்றுக்கிழமை •வெளியூர்: 28-10-2024 திங்கள்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்